
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 மே - 2000 இதழ் - 5




அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# வாசகர்களின் கவனத்திற்கு

திருமறை ஆசான் மாத இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் தங்கள் பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிட்டு, தெளிவான முகவரியுடன் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லையெனில் இதழ் நிறுத்தப்படும் என்பதை வேறு வழியின்றி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

ஆசிரியர்.



## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | ஜெபித்த உங்களுக்கு நன்றி | 07 |
| 3. | பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி? | 08 |
| 4. | பெண்கள் பகுதி | 12 |
| 5. | வாலிபர் பகுதி | 15 |
| 6. | யாத்திராகமம் ஒரு கண்ணோட்டம் | 18 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 19 |
| 8. | அது இலவசமானது | 24 |
| 9. | ஆவியில் எளிமையுள்ளவர்கள் | 27 |
| 10. | கதவு | 29 |
| 11. | விசுவாசத்தின் அடிப்படைகள்-3 | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 May - 2000 Issue - 5**

*ஆசிரியவுரை*



## "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்"

உலகத்தைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்கும்படியாய் வானத்திலிருந்து இறங்கி வந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, ஒரு "மாபோதகர்" என்பதை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்வர்.ஒருவேளை மார்க்கரீதியாக இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் கூட இக்கருத்தை மறுப்பதில்லை. ஏனெனில்,அவருடைய பிரசங்கம் மற்றும் பேச்சுக்கள் இப்பூமியில் ஏற்படுத்திய தாக்கம் அவ்வளவு மகத்தானது. மண்ணில் பிறந்த வேறு எவருடைய தகுதியும் இவரோடு ஒப்பிடத்தக்கவைகளே அல்ல.

பொதுவாக,ஒரு பேச்சாளன் மக்களின் மனதைக் கவர்ந்து,ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெற்று, புகழ் ஏணியில் ஏறுவதற்குப்பல தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். வாக்கு வன்மை, நா நயம், வார்த்தை வளம், கருத்தாழம், இன்னும் பேச்சில் வேகம், எடுத்தியம்புவதில் விவேகம், சமயோசிதம், சொல்லாட்சியில் முடிசூடா தன்மை என்று இப்பட்டியலை நீட்டித்துக் கொண்டே போகலாம். இத்தகுதிகளை பெருமளவு பெற்றிருந்த பலர் இம்மண்ணில் வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால், இவர்கள் பெரும்பாலோருடைய பேச்சுக்கள் காலத்தால் கரைந்து, சாரம் குறைந்து, சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து மங்கி மறைந்துவிட்டது. இத்தனைக்கும் இவர்களில், மிகப்பலர் உலகத்தின் பல பாகங்களுக்குச் சென்று தங்களது சொற்பொழிவுகளை மேற்கொண்டவர்கள்.

ஆனால், தன்னுடைய வாழ்நாளில் 200 மைல்களுக்கு அப்பால் பிரயாணம் செய்திராத இயேசுவின் பேச்சுக்கள், இன்றும் அதன் புகழ் மணம் மாறாமல் பிரசங்க வானில் மின்னிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவரிடமிருந்த விசேஷித்த தகுதிகள் தான். ஆம், மக்களின் மனநிலையை உணர்ந்து, காலச் சூழலைக் கருத்தில் கொண்டு, எதிர்பார்ப்புகளைக் கணக்கிலெடுத்து, குறிப்பாக ஆன்மீகத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசின விதம் தான். இப்படிப் பேசுவது எவ்வளவு சிறப்புக்குரியது என்று ஞானி சாலமோன் குறிப்பிடுவதைக் கவனியுங்கள், ***"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்."*** (நீதி.25:11).

***"நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்"*** என்ற உண்மையை இயேசு, உலகத்துக்கு உதிர்த்தது கூட, மக்களின் மனநிலையை நாடி பிடித்துப் பார்த்து, சரியான நேரத்தில் சொல்லப்பட்ட ஒன்றே. சிறப்புமிக்க இவ்வார்த்தைகளின் பின்னணியைக் கொஞ்சம் கவனிப்போம்.

யோவான் அப்போஸ்தலனுடைய நற்செய்தி நூல் மற்ற மூன்றைக் காட்டிலும் வித்தியாசமானது. இயேசுக் கிறிஸ்துவின் தெய்வீகத்தை நிலைநிறுத்துவது தான் இவரின் பிரதான நோக்கம். இதனடிப்படையில் ஜனங்களை நித்திய ஜீவனுக்குள் வழி நடத்துவது.(யோவா.20:30:31). இவருடைய எழுத்துக்கள் அனைத்தும் இதை மையமாக வைத்தே அமைந்திருக்கிறது. மற்ற மூவருடைய பார்வையின் கோணமும், இவருடைய பார்வையின் கோணமும் வித்தியாசமானதாகவே இருந்தது. இவருடைய புத்தகம் முழுவதும் "ஏழு நானே" க்களையும் ***"எட்டு அற்புதங்களையுமே"*** சுற்றி வருகிறது.

ஒரு கட்டத்தில். ஊழியத்தினிமித்தம் எதிர்ப்புகள் ஏராளமாகி, அது இயேசுவின் உயிருக்கே ஆபத்தாக மாறிய போது, அவர் யூதேயாவை விட்டு கலிலேயாவில் சஞ்சரித்தார் என்று யோவான் எழுதியுள்ளார். (யோவா.7:1) இயேசுவின் வாழ்க்கையில் அந்தக் கால கட்டம் மிகவும் சோதனையானது. உலகத்தார் மற்றும் ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கு மாத்திரமல்ல,தனது குடும்பத்தாரின் குறை மதியோடு கூடிய பேச்சுக்கும் ஆளாக நேர்ந்தது. ஆம், அவருடைய இளசுகள் கூட அவரை இளக்காரம் செய்தனர்.(யோ.7:4,.5)

எதிர்ப்பும், ஏளனமும், இளக்கராமும் கைகோர்த்து வந்த ஒரு பிரத்தியேகச் சூழ்நிலையில், பக்தியுள்ள யூதர்கள் பங்கேற்க விரும்பும் ***கூடாரப் பண்டிகைக்காய்*** எருசலேமுக்கு இரகசியமாய் வந்து சேர்ந்தார். தேவன் இஸ்ரவேலர்களை வனாந்தரத்தின் வழியாக நடத்தி வந்த போது, முன்னோர்கள் கூடாரங்களில் குடியிருந்ததை இப்பண்டிகை யூதர்களுக்கு நினைவுபடுத்தும். அந்த நினைவுகளில் தத்ரூபமாக மூழ்கி திளைக்க வேண்டுமென்பதற்காக, யூதர்கள் அந்நாட்களில், தங்கள் வீடுகளுக்கு வெளியே, மரக்கிளைகளாலும், மரக்கொத்துகளாலும் வேயப்பட்ட சிறு சிறு குடில்களை அமைத்தும், துணிகளால் ஆன கூடாரங்கள் போட்டும் அதில் குடியிருப்பார்கள். இது ஒரு வார காலத்துக்கு நீடிக்கும்.

இப்பண்டிகைக்கு சேர்ப்பின் பண்டிகை என்ற பெயர் உண்டு என்பது பரவலாகத் தெரிந்த ஒன்று. ஏனெனில் இப்பண்டிகைக்காய் எண்ணெய் மற்றும் கனி வகைகளைச் சேர்த்து வைப்பது வழக்கம். ஆனால், வரலாற்றுப் பின்னணி மிக்க இப்பண்டிகைக்கு ஒளிப் பண்டிகை என்ற வேறொரு பெயரும் உண்டு என்பது அநேகர் அறியாதது.

ஒளிப்பண்டிகை என்பது காரணப்பெயர். ஆம், இப்பண்டிகை கொண்டாடப்படும் ஒரு வார காலத்துக்கும், எருசலேம் பட்டணத்தில் விசேஷித்த ஒளி பரவி இருக்கும். அந்த நாட்களில் எழுபது அடி உயரம் கொண்ட நான்கு தூண்களின் மீது பல பிரிவுகள் கொண்ட விளக்குகள் தேவலாயத்தின் முற்றத்தில் ஏற்றப்பட்டு, அதின் பிரகாரங்கள் ஒளியேற்றப்படும். இந்த விளக்குகளின் வெளிச்சத்தில் பண்டிகைக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடக்கும். ஆசாரியர்களின் பின்னால் அணி வகுக்கும் ஒரு கூட்டத்தார், அருகிலுள்ள சீலோவாம் குளத்துக்குச் சென்று, தண்ணீர் கொண்டு வந்து பீடத்தின் மேல் ஊற்றி மகிழ்வர். இன்னும் அநேகர் பலிபீடத்தை சுற்றி வருவர். மொத்தத்தில்இவர்களின் மத நம்பிக்கைகளை நிறை வேற்றுவதற்கு, இந்த விளக்குகளின் ஒளிப்பிரவாகம் மிகப்பிரயோஜனமாக இருக்கும்.

பிறகு,பண்டிகை நாட்கள் நிறைவேறும் போது, விளக்குகள் இறக்கப்பட்டு அணைக்கப்படும். அப்பொழுது மீண்டும் அவர்கள் இருளுக்குள் பிரவேசிக்க வேண்டி வரும். உயரமாக ஏற்றப்பட்ட விளக்குகளின் வெளிச்சத்தில் வெகு விமரிசையாக பண்டிகை கொண்டாடியவர்களுக்கு, விளக்குகள் அணைக்கப்பட்டவுடன் " பொக் " என ஆகிவிடும். மன ரீதியான ஒரு தொய்வும், பண்டிகை இனி எப்பொழுது வரும் என்ற ஏக்கமும் மேலோங்கி, முடிந்து போன பண்டிகை பற்றியும், அணைக்கப்பட்ட விளக்குகளின் வெளிச்சம் பற்றியும் சில நாட்களுக்குப் பெரிதாகப் பேசிக்கொண்டிருப்பர். இப்படி ஜனங்களின் நினைவும், பேச்சும் கனிந்து வந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான், இயேசு தன்னைப்பற்றிய ஒரு மாபெரும் உண்மையை உலகுக்கு வெளிப்டுத்தினார். " ... ***நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்*** " என்பதே அவ்வுண்மை. *(யோவா.8:12)*

சரி, இயேசு கிறிஸ்து ஒளியாயிருப்பதால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I. ஒளியானது நம்மை நமக்குக் காட்டுகிறது.

முதாலாவது, இயேசுக் கிறிஸ்து நான் ஒளியாக இருக்கிறேன் என்றது தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக உள்ளது. தன்னை ஒரு பெரிய மனிதராகக் காட்டிக் கொள்வதற்கு அவர் பயன்படுத்திய வஞ்சகவார்த்தைகள் அல்ல அவை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கன் இது பற்றிக் கூறியுள்ளார். "***கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப்பிடித்து, உம்மைத் தற்காத்து உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்***" என்று. *(ஏசாயா.42:7)*

மேலும், யோவான் அப்போஸ்தலன் இந்த ஒளியைக்குறித்து சொல்லும்போது "*உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி*" என்றார்.(யோவா.1:9)

புதிய உடன்படிக்கையின்படி ஒளி மற்றும் எல்லா ஜாதிகளுக்குமான ஒளி என்று முக்கிய தீர்க்கனாகிய ஏசயாவும், எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி என்று முக்கிய அப்போஸ்தலனாகிய யோவானும் குறிப்பிடுவதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்து அந்த ஒளிப்பண்டிகையின் முடிவில் தன்னை ஒளி என்று உலகுக்கு வெளிப்படுத்திய போது, யூதர்களுக்கு மாத்திரம் ஒளி என்று சொல்லாமல், உலகம் முழுமைக்கும் ஒளிஎன்றே சொன்னார். நானும் ஒரு ஒளி என்று அவர் சொல்லவில்லை.

ஆகவே, உலக மக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் யார் என்பதை இயேசுவாகிய ஒளியினிடத்திலிருந்து மாத்திரமே தெரிந்து கொள்ள முடியும்.இயேசுவாகிய ஒளி நம்மீது படும்போது, அது நம்மை நமக்கு அடையாளம் காட்டுகிறது.

இன்றைக்கு மனிதன் இழந்து போனவனாகக் காணப்பட்டு தடுமாறிக் கொண்டிருப்பதற்குக் காரணம், இயேசுவின் ஒளி அவன் மீது படாததே. தான் யார் என்பதே இன்னும் அவனுக்கு விளங்கவில்லை.தன் வாழ்வு பற்றி புரியவில்லை. வாழ்வின் நோக்கம் தெரியவில்லை. மறுவாழ்வு பற்றிய தெளிவில்லை. ஆகவே தான் எவ்வளவோ அவன் முயன்றும் ஆன்மீக வாழ்வில் அவனால் தன்னை நெறிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. முயன்று முயன்று தோற்றுக் கொண்டுள்ளான்.ஏன் என்ன காரணம்? ஆன்மீக வாழ்வில் இயல்பான ஒரு நாட்டம் இருந்தும் ஏன் இந்த நிலை?

மெய்யான ஒளியாகிய இயேசுவை அவன் புறக்கணித்துவிட்டு மகான்களையும், துறவிகளையும் பின்பற்றி, குதர்க்கமான கொள்கைகளில் தன்னை சிக்கவைத்து, விடுபடும் வழி தெரியாமல் சீரழிந்து கொண்டுள்ளான். பாவத்திலே உழன்று கொண்டிருக்கும் இந்த மாமனிதர்களை நம்பி, பாவ விமோசனம் பெற முடியாது. இன்னும் ஒழுக்கக் கேடுகளைப் போதனையாகத் தரும் விக்கிர வணக்கத்தாலும் அது முடியாது.

இந்த உலகத்திலே பிறந்து பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து, ஒ்ளியாகப்பிரகாசித்துக் கொண்டிருக்கிற இயேசுவ்ால் மட்டும் மனிதனை மனிதனுக்கு அ்டையாளம் காட்டி நல்வழிப்படுத்த முடியும். த்தான் யார் .என்பதை அவரை நோக்கும் போது தான் அவன் தெரிந்து கொள்ள முடியம். தன்நிலை அறியாத ஒரு மனுஷன் ஒருபோதும் தேவனுக்குப் பிரியமானவனாக ஜீவிக்க முடியாது. இயேசுக் கிறிஸ்து வார்த்தையாகவும் சத்தியமாகவும் இருந்து நம்மை நமக்குக் காட்டுகிறார். உணர்வடைவோம்.நம்மை நாம் அறிவோம்.

## II. ஒளியானது நம்மை தேவனிடத்திற்கு வழி நடத்துகிறது:

ஒருவனின் நிலையை உணர்த்தும் - அவனை அவனுக்குக் காட்டும் வேலையோடு இயேசுக்கிறிஸ்து நிறுத்திக்கொள்வதில்லை. தன் நிலையை உணர்ந்து செயல்படும் மனிதனை, தன்னைப் படைத்த தேவனிடத்தில் வழி நடத்துகிறார். உன்னதத்திலிருந்து வந்த தேவ குமாரன், அழுத்தம் திருத்தமாக இங்கு சொல்வதைக் கவனியுங்கள். "*அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்...* " என்றார்.(யோவா.14:6,7).

அதாவது, நான் நானே வழி, நான் நானே சத்தியம், நான் நானே ஜீவன் என்று.ஆம், வேறு யாருமே அல்ல. தேவனிடத்தில் மனிதனைக் கொண்டு போய்ச் சேர்க்கும் வல்லமை, அதிகாரம் வேறு யாருக்குமில்லை. பாவத்தினால் தன்னை விட்டுப் பிரிந்து போன மனிதனை, தன்னிடமாகச் சேர்த்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்யும் ஒரே ஒருவர் இயேசுக்கிறிஸ்து மட்டுமே. வேறு எந்த மனிதனுக்கும், அல்லது அவதாரப் புருஷனுக்கும் அந்த அதிகாரம் இல்லவே இல்லை.

அப்போஸ்தலர் நான்காம் அதிகாரத்தில் பேதுரு, ஜனத்தின் அதிகாரிகள் மற்றும் இஸ்ரவேலர்களின் மூப்பர்களுக்கு முன்பாக குற்றவாளியாக நிறுத்தப்பட்டுப் (4:6) பேசினபோது, பரிசுத்த ஆவியானால் நிறைந்து சொன்ன வார்த்தையைக் கேளுங்கள். *வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவராலேயன்றி, வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை* என்றான்(4:11,12)

ஒளியாகிய இயேசு கிறிஸ்து நானே வழி என்று சொல்லுவதில் வேறோரு அர்த்தமும் அடங்கியிருக்கிறது. தன்னுடைய சரீரமே வழி என்கிறார். அதாவது சரீரமாகிய சபையே வழி என்கிறார். இயேசுக்கிறிஸ்துவுக்கு ஒரே சரீரம். ஆகவே சரீரமான சபையும் ஒன்றே,(எபே.4அதி) ஆனால், இன்று மார்க்க உலகில் ஏராளமான அமைப்புகள் சபை என்ற பெயரில் இயங்கிக் கொண்டுள்ளது. இயேசு, பரலோகத்திற்கு ஒரு வழி தான் உண்டு, அது சரீரமாகிய சபை என்று அடித்துக் கூறும் போது, இயேசுவின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவருடைய போதனைக்கு முற்றிலும் விரோதமாக ஏராளமான வழிகளை ஜனங்களுக்குக் காட்டுகின்றனர். இது உண்மையானால், இயேசு, நானும் ஒரு வழி என்று சொல்லியிருந்தாலே போதும் தானே; *ஏன் நானே வழி என்று சொன்னார்? சிந்திப்போம்.*

பாவ மனிதனைப்பரிசுத்தப்படுத்தி தேவனிடம் சேர்க்கவே இயேசு வந்தார். ஒளியாக இருந்து மனிதனை தேவனிடம் வழி நடத்துகிறார். ஒருவன் விசுவாசித்து (மாற்.16:16) மனந்திரும்பி (அப்.2:38) அறிக்கையிட்டு (ரோமர்10:9,10) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்போது (அப்.22:16)

பரிசுத்தமாகிறான். கர்த்தருடைய சபையில், சரீரமாகிய சபையில் சேர்க்கப்படுகிறான்.(அப்.2:47) இறுதிவரை உண்மையாக இருந்தால் நித்திய ஜீவன் அடைகிறான். தேவாதி தேவனோடு என்றென்றும் வாழ்வான்.

ஆக, ஒளியாகிய இயேசுகிறிஸ்து, மனிதனை தேவனிடத்திற்கு வழி நடத்துகிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே இயேசுக்கிறிஸ்து எவ்வளவு ஆழமான பொருளில் தன்னை உலகத்தின் ஒளி என்று சொல்லியுள்ளார் என்பதை ஓரளவு புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இயேசு இன்னும் எந்தெந்த வகைகளில் ஒளியாக உள்ளார் என்று நிறையச் சொல்ல முடியும். ஏனெனில் அவருடைய வார்த்தைகள் அவ்வளவு அர்த்தம் உடையவை.

இப்பொழுது நாம் பார்த்த இந்த இரண்டு காரியங்களையும் கவனமாக சிந்தித்து, நம் நிலையை சீர்த்துக்கிப் பார்ப்போம். அவர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் உள்ளார் என்பதை மனப்பூர்வமாக ஏற்று அவர்மூலம் தேவனிடம் சேரும் சிலாக்கியத்தைப் பெறுவோம்.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

**S. ராஜநாயகம்**

---

## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு,சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் ***(Gospel Tracts)*** உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை.** தேவைக்கு முந்துங்கள்!

### தலைப்புகள்

***1. உன்னை நீயே எண்ணிப்பார்***
***2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்***
***3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?***
***4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...***
***5. ஞானஸ்நானம்***
***6. யார் கிறிஸ்தவன்?***
***7. ஆராதனை***
***8. சபை என்பதுஎன்ன?***

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி*
*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம் - 638 701 இந்தியா*
✆ 04257 20030



## ஜெபித்த உங்களுக்கு நன்றி!

*மே 1-3 , 2000 ஆகிய தேதிகளில் ஏலகிரி மலையில் நடந்த* **வேனிற்கால வேதாகம முகாமிற்காகவும்,** **திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கிற்காகவும் ஜெபித்த நல் உள்ளங்களுக்கு** *நன்றி! நன்றி!!*

## வாசகர்களுக்கு முகாம் பற்றிய சில தகவல்கள்

- ✱ பங்கு கொண்ட மாநிலங்கள் - 3
- ✱ பங்கு கொண்ட மாவட்டங்கள் - 15
- ✱ பங்கு கொண்ட நகரங்கள் - 31
- ✱ பங்கு கொண்ட பிராந்திய சபைகள் - 41
- ✱ பங்கு கொண்ட மொத்த நபர்கள் - 351
- ✱ ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டு நற்செய்திக்கு கீழ்ப்படிந்தவர்கள் - 16
- ✱ புதிய அங்கத்தினர்களால் பயனடைந்த பிராந்திய சபைகள் - 6

திருமறை ஆசானை வெளியிடும் காங்கயம் கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்படும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள், பங்குபெறுங்கள்.

ஆசிரியர்

# பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி?



***நீ***ங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதெப்படி என்கிற தொடர் பாடத்தை நாம் படித்துக்கொண்டுள்ளோம். இந்த பாடத்தின் ஆரம்பமுதல் என்னோடு சேர்ந்து படித்தவர்கள் கர்த்தருடைய சபையைக் குறித்தும், அதில் அங்கமாவது எப்படி என்பது குறித்தும், நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஆரம்பிப்பது குறித்தும் தெளிவாய் கற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். இவைகளைக் குறித்து உண்மையான முயற்சி செய்பவர்கள் எத்தனை பேர் என்பது எனக்குத்தெரியாது. அநேகர் உண்மையில் முயலுவீர்கள் என்றும் இந்தப் பாடத்தின் விளைவாக இந்த தேசத்தில் ஆங்காங்கே கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்படும் என்றும் நம்புகிறேன்.

இந்த மாதம், பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி? என்கிற பாடத்தைப் பார்க்கப்போகிறோம். ஆம், சபையை நடத்தும்போது அவ்வப்பொழுது கேள்விகள் எழுவதுண்டு. பதில் எதிர்ப்பார்த்துக் கேட்கப்படும் கேள்விகள் அநேகம் எழுப்பப்படும். அவைகளில் சிலவற்றை குறித்து இங்கே விளக்குவதும், அதற்கு பதில் எழுதுவதும், பிரச்சினைகள் எழும்போது தீர்ப்பதற்கு மிகவும் உதவும்.

வெகு நாட்களுக்கு முன்பே, பேதுரு, இப்படி கூறுகிறார். "***கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்: உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.***" *(1.பேதுரு 3:15)*

நாம் வேதத்திற்கு சுய விளக்கம் தர முயற்சிப்பது சரியா? இதோ மீண்டும் பேதுரு பதில் தருகிறார். "***வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையாதயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.***" *(2.பேதுரு. 20:21).*

விசுவாசத்தினால் மாத்திரமே ஒருவன் இரட்சிக்கப்படமுடியும் என்று வேதம் போதிக்கிறதா? நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால் விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது. ஒருவன் உண்மையாக விசுவாசித்தால், அல்லது அவனை இரட்சிக்கும் படியான விசுவாசம் அவனுக்கிருந்தால், அவனை கர்த்தர் என்ன செய்யச் சொன்னாரோ அவை அனைத்தையும் அவன் செய்வான். இப்படிப்பட்ட, விசுவாசம் இல்லாதவன், இரட்சிக்கப்பட முடியாது. கிறிஸ்து சொல்லுகிறார். "***விசுவாசமுள்ளவனாகி***

***ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.***" (மாற்கு 16:16) நாம் பிதாவின் சித்தம் செய்கிறவர்களாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து மொழிகிறார். "***பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.***" (மத்.7:21) யாக்கோபு நாம் திருவசனத்தின் படி செய்கிறவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். (யாக்.1:22) யாக்கோபு மேலும் சொல்லுகிறார். "***அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.***" (யாக்.2:17)

ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதெப்படி? விசுவாசத்தைப் போலவே ஞானஸ்நானம் மாத்திரம் நம்மை இரட்சிக்காது. ஞானஸ்நானம் என்பது, ஒருவன் கர்த்தரை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, பின்பு, ஞானஸ்நானம் என்கிற கட்டளைக்கு கீழ்ப்படியும்படியாய், பாவங்கள் கழுவப்பட தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படும்போது நிறைவேறுகிறது. (எபி. 11:6: லூக்.13:3, மத்.10:32; ரோமர் 6:3,4). பேதுரு, ஞானஸ்நானம் இரட்சிக்கும் என்று கூறும்போது அவர், கீழ்ப்படிதலை மையமாக வைத்து உலகத்தின் பாவத்திற்குள் இருக்கும் நாம், கிறிஸ்துவுக்குள் நம்மை உட்படுத்தும் போது இரட்சிக்கிறதென்று சொல்கிறார். (1.பேதுரு.3:21 ; கலா.3:26,27; 2.கொரி.5:17)

பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டா? கிறிஸ்து சொல்லுகிறார். அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவா.14:6) மீண்டும் அவர் சொல்லும்போது "***மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்.***" (யோவா.10:1) என்கிறார். ஆண்டவர் இக்காரியத்தைக் குறித்து மிகவும் தெளிவாக கூறியிருக்கும்போது, பரலோகத்திற்கு எத்தனை வழி இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்கள்? பிற வழிகள் அநேகம் இருந்தால் கர்த்தர் இவ்வழியைத் தர ஏன் இவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டார்?

எந்த ஒரு சபையிலும் அங்கத்தினராயிராமல், இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல முடியாதா? பிரிவு சபையிலோ அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட சபையிலோ அங்கமாக இல்லாமல், இரட்சிக்கப்பட்டு ஒருவனால் பரலோகம் செல்ல முடியும். ஆனால், இவ்வுலகிலும், வரப்போகிற உலகிலும் ஒருவன் இரட்சிக்கப்பட கர்த்தருடைய சபையின் அங்கமாக ஒருவன் இருக்கவேண்டும். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபே.5:23)

ஆகவே ஒருவன் இரட்சிக்கப்பட சபையில் இருத்தல் அவசியம். நோவா கட்டிய பேழை அவர்களுக்கு இரட்சகராக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் இரட்சிக்கப்பட அந்த பேழைக்குள் இருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. பவுல் முடிவிலே கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தை அல்லது சபையை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பாரானால், அதில் அங்கமாக இல்லாதவர்கள் என்ன ஆவார்கள்? உங்களுக்கே தெரியும் என நினைக்கிறேன்.

மோசேயின் பிரமாணம் கிறிஸ்தவர்களை இன்று கட்டுப்படுத்துகிறதா? வீட்டிலேயோ அல்லது பொழுது போக்குக்காகவோ? இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் எத்தவறுமில்லை. ஆனால் ஆராதனை என்று வரும்போது தான் அது சரியானதாக இருப்பதில்லை. கர்த்தர் நம்முடைய வாய்ப்பாட்டினால் மாத்திரம் அவரைத் துதிக்க வேண்டும் என்று வகைப்படுத்தி கூறியிருக்கிறார். *(எபே.5:19; கொலே.3:16)*அவர் இசைக் கருவிகளைப் பயன்படுத்தலாம் என்று கூறியிருந்தால் அதைப் பயன்படுத்துவதில் எத்தவறுமில்லை, ஆனால் அவர் அப்படிக் கூறவில்லை. ஆகவே, இங்கு நாம் நம்மைப் பிரியப்படுத்துகிறோமா? அல்லது கர்த்தரைப் பிரியப்படுத்துகிறோமா என்பதுதான் முக்கியம். மனிதன், எல்லா விஷயங்களிலும் தனக்கு ஒரு வழியை உண்டுபண்ணுவதிலும், அதுதான் சரியானது என்று நிரூபிக்க அவன் செய்யும் முயற்சிகளையும் நினைத்தால் அதிசயமாயிருக்கிறது.

கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்தவர்கள் எப்பொழுதெல்லாம் பங்குகொள்ள வேண்டும்? வாரத்தின் முதல் நாளில் அப்பம்பிட்கும்படி கூடிவந்தார்கள் என்று நமக்கு ஒரு முன் உதாரணம் இருக்கிறது. *(அப்.20:7)* ஆராதனைக்கென்று கிறிஸ்தவர்கள் எப்பொழுதெல்லாம் கூடி வரவேண்டும்? ஒவ்வொரு வாரமும் அல்லது ஞாயிற்றுகிழமையும் என்பது சரியா? சரிதான். இப்படி கிறிஸ்தவர்கள் கூடிவரும் போதெல்லாம் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளவேண்டும்.

மூப்பரும் மற்றும் உதவிக்காரரும் இல்லாமல் வேதாகமத்தின் முறைமையின்படி சபையானது இயங்க முடியுமா? ஆம், மூப்பராகவும், உதவிக்காரராகவும் வளர்வதற்கு அங்கத்தினர்களுக்கு காலம் எடுக்கும் *(1தீமோ.3: தீத்து.1)* மூப்பர்கள் எழும்பியப் பின் சபை இயங்க வேண்டுமென்றால், அது மூப்பர்கள் உண்டாகும் முன்னும் இயங்குவது அவசியம். ஒரு பிராந்தியசபை, மூப்பர்கள் ஆகும் தகுதியுள்ள மனிதர்களைக் கொண்டுள்ளதாயிருக்கும் முன், சபையின் அங்கத்தினர்கள், தலைமைத்துவத்தை சபையின் ஆண் அங்கத்தினர்களிடமே கொடுக்க வேண்டும். ஆனால் தகுதியுள்ள [illegible] ஒரு சபையில்இல்லாதிருந்தால்

மூப்பர்களும் உதவிக்காரர்களும் இல்லாமலிருப்பது நல்லது. தகுதியில்லாதவர்களை மூப்பராகவும், உதவிக்காரர்களாகவும் நியமிப்பது, சபைக்கு நன்மை தருவதை விட தீமையையே உண்டாகும்.

கர்த்தருடைய சபையை ஒரு நபர் எப்படி ஆரம்பிப்பார்? யாராவது ஒருவர் முன் நின்று நடத்த வேண்டும். நீங்கள் ஒரு அங்கத்தினராக இருந்து ஒன்றுக்கும் மேற்ப்பட்டவர்களுக்குப் போதித்தால் அவர்களும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முன் வரும்போது, அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய சபையை தொடங்குவதற்கு ஆயத்தமாகிவிடுகிறீர்கள். நீங்கள் ஒன்றுக்கும் உதவாது அமர்ந்து ஒரு காரியத்தையும் கர்த்தருக்காக செய்யாவிட்டால், எதையும் உங்களால் இவ்வழியில் ஆரம்பிக்கமுடியாது. ஆனால் கர்த்தரை நீங்கள் நேசித்தால், அதின் பின் ஒரு சபையை நீங்கள் ஆரம்பிப்பீர்கள் என்பது திண்ணம்.

நாம் அநேக கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் நம்முடைய பாடத்தை முடிக்கும் முன், கள்ள போதனைக்கு உங்களை காத்துக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்துகிறேன். ஒரு வேளை உங்கள் சகோதரர்களிடம் இருந்துவரும் போதனையானாலும் அதை ஏற்றுக்கொள்ளும் முன் வேதத்தின் வெளிசத்தில் அவசியம் அதைச் சரி பார்த்துக்கொள்ளுங்கள். உபதேசங்களைப் பொறுத்தவரை நாம் தாராள மனமுடையவர்களாயிருக்க கூடாது. ஆனால் அதே சமயம் உபதேங்களைப் பொருத்தவரையில், நாம் நம்முடைய நிலைமையில் மூட அபிமானிகளாக இருக்கவும் கூடாது. நேர்த்தியான வழி ஒன்று உண்டு. அது கர்த்தருடைய வழி. நாம் அதின்படி நடக்க பெரும் முயற்சி எடுக்கவேண்டும்.

இது எதைக் காட்டுகிறது என்றால், நீங்களும், சபையின் மற்ற அங்கத்தினர்களாகும் வேத அறிவை வளர்த்துக் கொள்ளும்படி தனிப்பட்ட ஆர்வம் காட்ட வேண்டும் என்பதைக் காட்டுகிறது. கர்த்தருடைய வார்த்தையை அறிந்துகொள்ளுங்கள். அதில் பயிற்சி பண்ணுங்கள். வாசித்து தியானியுங்கள், நீங்கள் இப்படிச் செய்தால் உங்களை எளிதாக வஞ்சிக்க முடியாது.

கர்த்தருடைய சபையை ஆரம்பிக்க நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றியாக முடிய நான் ஜெபிக்கிறேன். மனச்சோர்வு அடைந்து, கர்த்தருடைய வேலையை நிறுத்திவிடாதீர்கள். தரித்திருங்கள். தொடர்ந்து ஊக்கமாக செயல்படுங்கள். கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருங்கள். அவர் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுக்கு நாங்கள் உதவியாயிருப்போம் என்று நீங்கள் எண்ணினால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

உங்களோடு சேர்ந்து இவைகளை படித்தது பயன் உள்ளதாயிருக்கிறது. கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக!

J.C.CHOATE J.C. சோட



பெண்கள் பகுதி

# எச்சரிப்பை வெறுத்தவள்

"*ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை*" என்று மத்.:11:11 ல் வாசிக்கிறோம். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் பிறந்து அவருக்கு வழியை ஆயத்தம்பண்ணினவன் இவன். மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்று சத்தமாய் பிரசங்கித்தவன் இந்த யோவான் ஸ்நானன். இவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிக் கூறும்போது, "*என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்.அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல...*" என்று கூறுகிறான். அதோடு இயேசு கிறிஸ்துவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தவனும் இந்த யோவானே (மாற்கு.1:9) இந்த மாபெரும் மனிதனுடைய உயிர் நம்மைப்போன்ற ஒரு பெண்ணின் கைக்கு இரையானது என்பதை நினைக்கும்போது வேதனையாய் உள்ளது.

யார் இந்த பெண்? மாற்கு.6:17-28 வரையுள்ள வசனப்பகுதிகளில் இவள் உள்ளாள்.ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவள் பெயர் ஏரோதியாள். ஏரோது செய்த இந்த தவற்றை யோவான் ஸ்நானகன் சுட்டிக்காட்டி, அது நியாயமல்லவென்று கூறுகிறான். இதனால் ஆத்திரமடைந்த ஏரோது யோவானைக் கட்டிக் காவலில் வைத்து விடுகிறான். ஆனால் யோவான் நீதியும், பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து அவனுக்குப்பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

இந்த ஏரோது தன் பிறந்தநாள் விழாவின்போது தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது, ஏரோதியாளின் குமாரத்தி சபையில் நடனம் பண்ணி, பந்தியிருந்தவர்களை சந்தோஷப்படுத்தினள்.அப்போது ராஜா உனக்கு என்ன பரிசு வேண்டும்? ராஜ்ஜியத்தில்பாதி கேட்டாலும் அதை உனக்கு தருவேன் என்று கூறினான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏரோதியாள் தன் மகளிடம் யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்று கூறி, அவனை சிரச்சேதம் செய்வதற்கு வழி வகுத்தாள்.

இவளின் வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு ஏரோது பாவஞ்செய்தான். அவனைக் காவல் பண்ணினாலும், அவன்மேல் பட்சமுள்ளவனாயிருந்தான். யோவான் நீதியும், பரிசுத்தமுள்ளவனென்று அறிந்திருந்தபடியால் ஏரோது தைரியமுள்ளவனாய் செயல்பட அஞ்சினான். ஆனாலும், பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கு மத்தியில் அவள் வாக்குக் கொடுத்து விட்ட படியால், தன்னுடைய கௌரவத்தை தற்காத்துக்கொள்வதற்கு அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏரோது மன்னனின் யோசனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை துண்டிக்கப் பட்டது எவ்வளவு கொடுமை.

ஏரோதியாள் தன்னை தவறு என்று சுட்டிக்காட்டிய தேவ மனுஷனை வெறுத்தாள். தன் பாவத்தைச் சுட்டிக்காட்டும்போது அதை ஏற்றுக்கொள்ள மனம் அற்றவளாய் இருந்தாள். இன்றைக்கும் அநேக பெண்கள் தேவனுடைய வார்த்தையை கூறும் தேவமனிதர்களை வெறுக்கிறார்கள். வசனம் தங்களை எச்சரிக்கும்போது முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறார்கள்.இங்கு ஏரோதியாள் தான் பாவம் செய்வதோடு அல்லாமல் தன் மகளையும் அதற்கு உடன்பட வைக்கிறாள். ஒட்டு மொத்த குடும்பமே கொலைகாரர்களாகிவிடுகிறார்கள்.

இன்றைக்கும் அநேக பெண்கள் தங்கள் பிள்ளைகளை சபைக்கு விரோதமாய் எழுப்பி செயல்பட வைக்கிறார்கள். ஆதியிலிருந்தே நாம் பார்க்கும்போது தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும் போது அது கொலையில் தான் போய் முடிகிறது. ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது பாவம் உலகில் பிரேவசித்தது. அதன் தொடர்ச்சியாக சகோதரனே, அவன் சகோதரனை கொலை செய்யும்படியான சூழ்நிலை உருவெடுத்தது (ஆதி.4:8).

ஏரோதியாள் இவ்வாறு செயல்படக்காரணம் தான் செய்து கொண்டிருந்த பாவத்தை விட்டு விட மனதில்லாததுதான். இன்றும் நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் பிசாசோடு ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். வசனம் நம்மை எச்சரிக்கிறது. தேவ மனிதர்கள் நம்மை வசனத்தை கொண்டு எச்சரிக்கிறார்கள். எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறோம்? இந்த ஏரோதியாள் பாவத்தை நேசித்தாள். தேவ மனிதனை பகைத்தாள். இதை வாசிக்கும் அன்பான சகோதரியே! நாமும் கூட வேதாகமம் நம்மை எச்சரிக்கும்போது, கோபமும், எரிச்சலும் கொள்ளாமல் தாழ்மையோடு அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து, இரட்சிப்பைப் பெறுவோம். எதிர்த்து நின்று தேவ கோபாக்கினையைப் பெற்றுக்கொள்ள வேண்டாம்.

அடுத்து,ஏரோதியாள் தன் மகளையும் தன் தவறுக்களுக்குக் கூட்டாளியாக்கிக் கொள்கிறாள். இன்று அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தவறான கருத்துக்களை போதித்து அவர்களுடைய நல்வழியை திசைதிருப்பி விடுகிறார்கள். சமுதாயத்திலும், சபையிலும்

இதனால் அநேக இடையூறுகள் நேரிடுகின்றன. உண்மையான சத்தியத்தை பரப்புவதற்கு பெற்றோர்கள் தடையாக மாறிவிடுகிறார்கள். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரபல்யம் அடையவேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சி, மற்றும் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப்படுத்துகிறார்கள். பெற்றோர்களே பிள்ளைகளுடைய வாழ்கையை எவ்வாறு பாழ்படுத்தி அழிவான பாதையில் இட்டுச் சொல்கின்றனர், என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

தாய்மார்களே,நம்முடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நாம் தடையாக உள்ளோமா? இந்த ஏரோதியாளைப்போல நாம் செயல்பட கூடாது. மாறாக நம் பிள்ளைகளை கர்த்தருக்காக ஒப்பக்கொடுப்போம்.தேவ ஊழியர்களை தாங்கும்படி செய்வோம். அப்போது நம்பிள்ளைகள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்

தேவனுடைய மனுஷனை கொலை செய்தாள் என்ற பழிக்கு காரணமாயிருந்தவள் இந்த ஏரோதியாள் என்ற சொல் காலத்திற்கும் அழியாமல் உள்ளது. தயவுசெய்து நாம் இப்படிப்பட்ட அநியாயமான செயலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல், அமைதலும், சாந்தமும் உள்ள இருதயத்தோடு சத்தியம் நம்மை எச்சரிக்கும்போது அதை பக்குவமாய் ஏற்றுக்கொண்டு பாவத்தை விட்டு, பரிசுத்தமாய் ஜீவிப்போம்.

நம் பிள்ளைகளையும் கர்த்தருடைய காரியத்தில் பங்கேற்கச் செய்வோம். அவர்கள் எதிர்த்து நிற்க நாம் ஒருபோதும் அனுமதி தரவே கூடாது. பிள்ளைகளோடு சேர்ந்து வசனத்தை ஏற்றுக்கொண்டு சபையை தாங்குவோம். சத்தியத்திற்காய் வைராக்கியமாய் இருப்போம்.

ரேச்சல் இராஜநாயகம்.

## இயேசு கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

(ரோமர் 5ம் அதிகாரத்திலிருந்து....)

1. தேவனிடத்தில் சமாதானம் (வசனம்.1)
2. கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம், (வசனம்.2)
3. தேவ மகிமையில் நம்பிக்கையில் மேன்மை பாராட்டல் (வசனம்2)
4. உபத்திரவத்திலும் களிகூறுதல்.(வசனம்.4)
5. உன்னதமான நம்பிக்கை (வசனம்.5)
6. தேவனுடைய அளவற்ற அன்பு (வசனம்.8)
7. தேவனுடன் ஒப்புரவாக்கப்படுதல். (வசனம்10,11)
8. தேவ கோபாக்கினையிலிருந்து விடுதலை(வசனம்.15,16)
9. நித்திய ஜீவன் (வசனம்.17)
10. நீதிமான்களாக்கப்படுதல். (வசனம்.19)



# யோசித்து முடிவெடுங்கள்

தன் கதிர் கரங்களை இவ்வையகத்தின் மாந்தர்மீது படர்ந்தும், மிளிர்ந்தும் கொண்டிருக்கின்ற ஆதவனை சுற்றியும், தன்னைத்தான் சுழன்றும், கொண்டிருக்கும் புவியின் வாழ்வில், மனிதன் தகவலின்றி திடீர் திகில்களையும், ஜீவியத்தின் நிகழ்ச்சியால் எழும்பும் மகிழ்ச்சியையும் சந்திப்பது திண்ணமாதலால், மானிடன், தொடர்பற்ற தனித்தீவாக திகழ முடியாது என்பதை உணர்ந்தவனாய், அவன் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தன்னைத் தேற்றவும், அதில் பங்குபெறவும் நம்பிக்கையுள்ள நண்பன் தேவையென்று எண்ணுவான் என்பதில் புல்லளவும் ஐயமில்லை.

தயாள தேவனிடமிருந்து ஞான வரத்தைப்பெற்ற சாலொமோன் தூய ஆவியானவரைக்கொண்டு மொழிந்திருக்கிற தெவிட்டாத தெள்ளமுதான நீதிமொழிகளில் "*சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்...*" (நீதி.17:17)என்று உணரத்தக்க உண்மையை யாத்துக் கொடுத்திருக்கிறார். இப்படி குணசீல நண்பர்கள் நமக்குக் கிடைப்பது நாம் வனாந்திரத்தில் தித்திக்கும் திராட்சைப்பழங்களை கண்டெடுப்பது போலிருக்கும். ஒவ்வொரு வாலிபரும் தன் தோழன் நல்லவனும், கஷ்ட நேரத்தில் கைவிடாதவனும், உதவும் குணமுடையவனுமாயிருக்க வேண்டுமென நினைப்பர். அப்படி சிநேகிதர்களைப் பெற்றுக்கொள்ள நாம், இயேசு மலைப்பிரசங்கத்தில் மொழிந்த தங்க வாக்கியத்தின்படி (மத்.7:12). நடக்கவேண்டும்.

## நண்பர்களால் வரும் நன்மைகள்

பரந்து விரிந்த இந்தப்பிரபஞ்சத்தில் மனிதர்களில் பல வகை உண்டு. ஒவ்வொரு மனிதனும் தன்வளர்ப்புக்கும், சூழலிற்கும், இன்னும் பல காரணங்களுக்கும் ஏற்ப குணத்தையும், பழக்க வழக்கங்களையும் பெற்றுக் கொள்கிறான். மனிதனாகப் பிறந்தால் துயரமும், துன்பமும், களிப்பும், உவகையும் வாழ்க்கையில் வழக்கமாக அமைந்துவிடுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் நாம் நேசிக்கும் ஒருவன் நம்மோடு இருந்து ஆற்றித் தேற்றி அரவணைத்து, நம்காரியங்களில் பங்குகொள்ள வேண்டுமென நினைப்பது மானிடரின் மனநிலையாய் இருக்கிறது.

வாலிபப் பிராயத்தில் இருக்கும் நீங்கள் தவறானப் பாதைக்கு அதன் கவின்மிகு தோற்றத்தால் கவர்ந்திழுக்கப்பட்டு, உங்கள் ஒழுக்கநெறிக்கு ஊறு விளைவிக்கும் நேரத்தில், ஒரு நல்ல நண்பன் உடனிருந்தால்,நம்மை எச்சரித்து இப்பாதக செயலால் வரும் தீமைகளை எடுத்துரைத்து, வேண்டாம் இழிச்சொல் நண்பா! எனச்சொல்லி ஒருவேளை நான் எச்சரிக்காவிடில் உனக்கும்,எனக்கும் கிடைப்பது பழிச்சொல் என நல்லெண்ணம் கொண்டவனாய் விளங்குகிறானே, அவன் புழுதியில் கண்டெடுத்தமுத்தாய் திகழுவான். ஒன்றுப்பட்ட ராஜ்ஜியத்தின் கடைசி வேந்தனாகிய சாலொமோன் இயம்புகையில் "*சிநேகிதன்*

*அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்* " என்கிறார். (நீதி.27:6) ஆக, நண்பன் நம்மை அன்போடு எச்சரிக்கையில் அவனை வெறுக்காமல் அவன் தரும் நல்லாலோசனையை ஏற்றுக்கொண்டு நற்கனிகள் தரும் விருட்சங்களாய் வளர்ந்தோங்குவோம்.

அறிவு பரிமாற்றம் செய்யும் கல்வி அறைகளுக்கு ஓய்வுகொடுத்து விடுமுறை நாட்களை இனிதே செலவிட்டுக்கொண்டிருக்கும் உங்களுக்குப் பல புதிய நண்பர்களை காணும் வாய்ப்பு தானாய்த்தேடி வந்தடையும். அப்படிக் கண்டவுடன் நம்பி, நட்புறவுக்கொண்டு உங்கள் நேரத்தையும்,நினைப்பையும் அவர்களோடு செலவழிக்காமல், இவன் நம்முடைய குணத்திற்கும், குடும்ப சூழலுக்கும் ஏற்றவன்தானா? என யோசித்தபின் முடிவெடுங்கள். ஞானியின் கூற்றை கூர்ந்து கவனியுங்கள், "*கோபக்காரனுக்குத் தோழனாகாதே உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே*" (நீதி.22:24) என்கிறார். சினமுடையவனுக்கு சிநேகிதன் ஆவோமானால் அவனுடன் செல்லுகிற இடமெல்லாம் சிரம்தாழ்த்தி, வெட்கி நிற்கும் சமயம் வாய்க்கும் என்பதை உணர்ந்து ஞானியின் போதனைக்குச் செவிமடுத்து நடவுங்கள்.

நம்முடைய வாழ்வில் நட்பு சிறந்தமைய வேண்டுமென்றால் முதலில் நாம் நல்ல தோழனாக பழகுதல் வேண்டும். "*சிநேகிதருள்ளவன் சிநேகம் பாரட்டவேண்டும்.*" (நீதி.18:24)என ஞானக்களஞ்சியமான நீதிமொழிகள் எடுத்துரைக்கிறது. சில நண்பர்கள் நம்முடைய சகல காரியங்களிலும், நமது இல்லத்து திருமணமாயிருந்தாலும், துக்க நிகழ்ச்சியாய் இருந்தாலும் பம்பரமென சுழன்று பணிபுரிவார்கள். இப்படிப்பட்ட சிநேகிதர்கள்,சிறந்த பண்பாளர்கள் , அமைவது திங்களுக்கொருமுறை முழுமதியாய் வெளிப்படும் ஒளிப்பிழம்பான நிலவைக் காண்பதற்கொப்பாகும். இதைக்குறித்து ஞானி நவில்கையில் "*சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு*" என்கிறார்.(நீதி.18:24).

சிநேகிதர்களால் நன்மைகள்,பல வருவது மெய்யானாலும், சிலர் நம்மை சிலந்தி வலையான சிக்கலில் அகப்பட வைப்பார்கள் என்பது உறுதி. அவர்களின் இன்பங்களுக்கு நாம் இரையாக வேண்டிய சூழ்நிலை நம்மை அறியமாலே எழும்பும்.இதை ஞானி வெகு தெளிவாக விவரிக்கிறார்.(நீதி.1:10-18). இப்படி தீங்கு செய்யத் தீவிரிக்கிற நண்பர்களை இனங்கண்டு அவர்களோடு இணங்காமல் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற உன்னத நினைப்பை இந்த இளம்பிராயத்திலேயே உங்கள் எண்ணங்களில் உறுதியாய் அறுதிவரை நிறுத்துங்கள்.

## ஆத்தும நண்பர் இயேசு உங்களுக்கு உண்டு

விண்ணகத்து விஷயங்களை இம்மண்ணகத்தில் ஒலித்த அருமை ஆண்டவர் இயேசு, "*ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை*" (யோவா.15:13)என்று மொழிந்ததாக அவரின் அன்புக்குப் பாத்திரமான யோவான் தன் நற்செய்தி நூலில் எழுதிக் கொடுத்திருக்கிறார். சிநேகிதத்தில் மிக உயர்ந்த சிநேகம் இன்னுரையும் தன் நட்பு நிலைப்பதற்காக கொடுப்பதே என்கிறார் நமதாண்டவர்.

நமது இரட்சகர் இவ்வுலகில் நல்ல போதகராக மாத்திரம் இல்லாமல் தான் போதித்த அனைத்துக் காரியங்களையும் செயல்படுத்திக் காண்பித்தார் என்பது உலகறிந்த ஒன்று. மனிதன், தேவனோடு இழந்த உறவை புதுப்பிக்க வேண்டும், அவனுக்குள் இருக்கும் ஆத்மா நித்திய நரகத்தில் வேதனைப்படக்கூடாது என்கிற சீரிய எண்ணத்துடன், அடிமையின் ரூபமெடுத்து, தான் படைத்த மனிதன் தன்னை எள்ளி நகையாடுவதையும், வசைச்சொற்களாலும், கசையடியாலும் தன் உள்ளத்தையும், ஊனையும் கிழித்தெடுப்பதையும், எருசலேம் வீதிகளில் தன் செங்குருதி சிந்தி நடந்து, தன்னை அறையப் போகும் பாரச்சிலுவையைத் தானே சுமந்து போவதையும் உனக்காக சகித்த நண்பர் ஒருவர் இருக்கிறார் வாலிபனே!.

நாம் வாழும் இந்த வையகத்தில் நல்லோனுக்காக ஒருவன் மரிப்பதரிது, ஆனால் நேசர் இயேசுவோ நாம் பாவத்தின் படுகுழியில் விழுந்திருக்கையில் நம்முடைய அக்கிரமங்களைப் பாராமல், நம் ஆத்துமாக்கள் மீது அன்புடையவராய் தன் சொந்த ஜீவனையும் ஈந்தாரே, அதுதான் அன்பிலும் பேரன்பாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. (ரோமர் 5:8). அகிலத்தையும் படைத்த ஆதிபனாம் ஆண்டவர் இயேசு உங்களை தன் நண்பர்களாய் இருக்கும்படி, தன் அன்பின் அடையாளங்களை அதாவது தழும்புகளைத் தாங்கிய இருகரம் நீட்டி அழைக்கிறார்.

இந்தக் குவலயத்தில் விண்ணரசின் சுவிசேஷத்தைக் கூவி அறிவிக்கையில், தன்னோடு பழகின, தனக்கு உதவியாயிருந்த குடும்பத்தில் ஒருவனான லாசரு ©¶zx " ÷£Œ ÷£Œx "*இயேசு கண்ணீர் விட்டார்*" (யோவா.11:35) என்று வேதம் கூறுகிறது. அவர், சகோதரனிலும் அதிக சொந்தமாய் லாசருவை சிநேகித்தார் என்பதில் கடுகின் நுனியளவும் ஐயமில்லை. அவர் அன்பை கண்ட யூதர்கள் "***இதோ இவர் அவனை எவ்வளவாய் சிநேகித்தார்.***" (யோவா.11:36) என்றார்கள்! ஆவிக்குரிய ரீதியிலும் நம் ஆத்துமா மரித்து போவதைக் காண்கிற அவர் நம்மை சிநேகிப்பதால் கண்ணீர் சிந்துகிறார். இப்படிப்பட்ட நண்பர் உங்களுக்காக இருக்கிறார்.

வானபரனின் பிரியமுள்ள சிநேகிதனாயிருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்வி எழும்புவது நியாயமே. அதற்கு இறைமைந்தன் தன் திருவாய்மொழிந்திருக்கின்றார். "***நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்***" (யோவா.15:14) என்கிறார். அவர் கட்டளையிட்ட யாவையும் நமக்கு அப்போஸ்தலர்கள் உபதேசித்திருக்கிறார்கள். அதை நாம் கைக்கொள்ளல்வேண்டும், குறிப்பாக நம் ஆத்துமா ஈடேற தேவன் மீதும் நம் ஆத்தும நேசராகிய இயேசுவின் மீதும் விசுவாசம் வைத்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய சுதன் என்று அறிக்கையிட்டு, திருமுழுக்குப் பெறுங்கள். (யோவா.14:1, அப்.2:38, 8:37, மாற்.16:16), மற்றும் அவருக்கு பிரியமாய் இருக்க அவர் கட்டளையிட்டயாவையும் அறியும்படி வேதத்தை தியானியுங்கள். உங்களுக்காக தன் ஜீவனை இயேசு கொடுத்தார் என்பதை யோசித்து அவரை நண்பராக ஏற்றுக்கொள்ள முடிவெடுங்கள், கர்த்தர் தாமே இக்காரியத்தில் உங்களுக்கு உதவுவாராக!

ஜே. பிக்கின்ஸ்

# யாத்திராகமம் ஒரு கண்ணோட்டம்

I. பொருள் : வெளியே செல்லுதல்

II. ஆசிரியர் : மோசே

III. காலம் : ஏறக்குறைய கி.மு. 1400

IV. முக்கிய வார்த்தை : விடுதலை, பிரயாணம், சட்டம் மற்றும் ஆசரிப்புக்கூடாரம்

## V. இது தரும் பாடம்:

1. மனிதகுலத்திற்காக தமது சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு தேவன், மனிதர்கள் மேலும், தேசங்கள் மேலும் ஆளுகைசெய்கிறார்.

(ரோ.9:6-21)

2. மோசே வலியுறுத்திச் சொன்னது

a. உங்கள் (இஸ்ரவேல்) மீதுள்ள தேவனுடைய அன்பு, அவரின் கட்டளையை உங்களுக்குக் கொடுக்க காரணமாயிருந்தது.

மற்றும்

b. தேவன் மீதுள்ள உங்கள் அன்பு, அவரின் கட்டளையை கைக்கொள்ளக் காரணமாயிருக்கும்.

## VI. இந்நூலின் செய்தி:

1. மீட்பு - ஆபிரகாமை பெரிய தேசமாக்குவேன் என்கிற வாக்குத்தத்தை தேவன் நிறைவேற்றுகிறார்.

2. அந்த தேசத்திற்கு இரண்டு நோக்கமிருந்தது:

a. மேசியா வரும் கோத்திரத்தைப் பாதுகாத்தல்

b. தேவனுடைய வார்த்தைகளை பாதுகாத்தல் மற்றும் கைக்கொள்ளுதல்

3. கிறிஸ்துவை அடையாளம் காட்டுகிறது.

a. மோசேயைப் போல, ஜனங்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கிறார்.

b. பஸ்காவின் பழுதற்ற ஆட்டைப்போல ஜனங்களை மரணத்திலிருந்து இரட்சிக்கும்படிக்கு பலியாக மரித்தார்.

c. ஆரோனைப்போல, இவர் பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.



# வெளிப்படுத்தின விசேஷம்

**அதிகாரம்.3:1-6**

ஆசியாவிலுள்ள சபைகளுக்கு எழுதப்பட்ட ஏழு கடிதங்களில், ஐந்தாவதான, சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதத்திலிருந்து வெளிப்படுத்தல் 3-ம் அதிகாரத்தைப் படிப்பதைத் தொடங்குகிறோம். சர்தை சபைக்கு இயேசுவானவர் தம்மை தேவனுடைய ஏழு ஆவிகளையும், ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் என்று விவரிக்கிறார். பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஏழு ஆவிகள் உண்டு.(வெளி. 1:4) தேவனுடைய இந்த ஏழு ஆவிகளும், சிங்காசனத்திற்கு முன்பாக உள்ள ஏழு அக்கினி தீபங்களையும் (வெளி.4:5) இன்னும், இந்த ஏழு ஆவிகளை பூமியெங்கும் அனுப்பின ஆட்டுக்குட்டியின் ஏழு கொம்புகளையும், ஏழு கண்களையும், பிரதிநிதித்துவப் படுத்துகிறது.(வெளி.5:6) தேவனுடைய இந்த ஏழு ஆவிகள் பற்றி வேதாகமத்தில் வேறு எங்கும் சொல்லப்படாததால், உண்மையாகவே இதன் பொருள் என்னவென்று நமக்குச் சரியாகத் தெரியவில்லை. கிறிஸ்துவானவரின் வலது கையிலுள்ள ஏழு நட்சத்திங்களும், ஆசியாவிலிருந்த ஏழு சபைகளின் தூதர்களாம்.(வெளி.1:16;1:20) ஆனால், இங்கே வெளி.3:1-ல் நாம் கவனிக்க வேண்டியது. ஏழுஆவிகளும், ஏழு நட்சத்திரங்களும் என்ன என்பது பற்றியல்ல, மாறாக யார் அதை வைத்திருக்கிறார் என்பது பற்றித்தான். கிறிஸ்துவின் அதிகாரம் இங்கே வலியுறுத்தப்படுகிறது. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் உடையவராக இயேசுகிறிஸ்து உள்ளார்.(மத்.28:18). ஆகவே ஏழுஆவிகளும், ஏழு நட்சத்திரங்களும் உட்பட எல்லாம்கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் முன்னுரையில், நினைவுபடுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் அதிகாரம், மூன்றாம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்போடு தொடர்புடையாதயிருக்கிறது. சர்தை சபை மனந்திரும்பாவிட்டால், இயேசு தனது மகத்தான அதிகாரத்தைக் கொண்டு அவர்கள் மேல் திடீரென வந்து, அவர்களைத் தண்டிப்பார்.

எல்லா நிருபங்களிலும் உள்ளது போலவே, உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்று சர்தை சபைக்கு இயேசு சொன்னார்.(வெளி.3:1) ஏழு கடிதங்களில், ஐந்தில், உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்ற வாசகம், அவர்கள் செய்த நற்கிரியைகளைப் பாராட்டின் பின் வருகிறது. ஆனால், சர்தைக்கு எழுதப்பட்டதில், வழக்கத்திற்கு மாறானது யாதெனில், இந்த சபையை இயேசு எதற்குமே பாராட்டவில்லை. எபேசுவிலிருந்த சபையைப் பற்றி சொல்லுவதற்கு அநேக நற்காரியங்கள் இயேசுவிடம் இருந்தது. இன்னும் தீமையான காரியங்கள் பலவற்றைக் கொண்டதாக தியத்தீராவும், பெர்கமுவும்

இருந்த போதிலும், அவர்களால் செய்யப்பட்ட சில நற்காரியங்களை இயேசு குறிப்பிட்டார். சிமிர்னா, பிலதெல்பியா சபைகளைப் பற்றி பாராட்டு தவிர, கர்த்தருக்கு வேறெதுவும் இருக்கவில்லை. ஆனால், சர்தை சபையைப் பொறுத்தமட்டில் பாராட்டுவதற்கு எதுவுமில்லை. இருப்பினும் சர்தை சபையிலிருந்த சிலரை கர்த்தர் பாராட்டினார். அவர்கள் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாதவர்கள். அவர்கள், வெண்வஸ்திரந்தரித்து அவர்களோடே நடக்கத் தகுதியானவர்கள். ஆனால் ஒட்டுமொத்த சபையைப் பொறுத்தளவில் கண்டனத்தையும், கடிந்து கொள்ளுதலையும் அது பெற்றுக் கொண்டது.

முதலாவது, சர்தை சபையை உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் என்பதற்காக கடிந்து கொள்ளுகிறார்.*(3:1)* மீந்திருக்கிற காரியங்களும் சாகிறதற் கேதுவானவைகளாக இருந்தது.*(3:2)* இது மிக முக்கியமான பாடத்தை கற்பிக்கிறது. இது, சர்தையிலிருந்த கிறிஸ்துவின் சபை. ஆனால்,அந்தப் பெயர் அவர்களை இரட்சிப்பதற்குப் போதுமானாதாக இல்லை. வேதத்தில் இல்லாத ஒரு பெயரைத் தரித்துக் கொள்வது கண்டிப்பாக கண்டனத்துக்குரியது. ஆனால், ஒரு சபைக்கு, சரியான பெயர் மாத்திரம் போதாது. அதற்கேற்ற செயல்பாடும் வேண்டும். உண்மையற்ற ஒரு கிறிஸ்துவின் சபைக்கும்,ஒரு பிரிவினைச் சபைக்கும் நடைமுறையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை.இரண்டுமே தேவனுக்கானதல்ல. அவைகள் மனந்திரும்பாதபட்சத்தில் இரண்டுமே நித்தியகாலமாக தண்டிக்கப்படும். இரண்டுக்குமான ஒரே வேறுபாடு யாதெனில், சத்தியத்திலிருந்து விலகிப் போனவர்களுக்கான தண்டனை மிக மோசமானதாக இருக்கும். *(லூக்12:47-48, 2பேதுரு.2:20-22)* சில சகோதரர்கள் கிறிஸ்துவின் சபை என்ற பெயரில் வரும் எந்தவொரு பிரசங்கியோடும், சகோதரனோடும், சபையோடும் ஐக்கியம் கொள்வார். குறிப்பாக அவர்களிடம் பணம் இருக்கும்போது, ஆனால், நாம் அப்படியிருக்கக் கூடாது. ***“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிவேசிப்பா னேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிவேசிப்பதில்லை.”*** *(மத்:7:21)*. சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதமானது, சரியான பெயரைக் கொண்டிருப்பது மாத்திரமே நமது ஐக்கியத்திற்கான அளவாக இராமல், போதிக்கப்பட்டு கடைப்பிடிக்கவேண்டிய ஒவ்வொன்றையும் கவனிக்க வேண்டுமென்று திட்டமாக விவரிக்கிறது. அவர் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் *(1யோ.1:7)*. சர்தை சபையானது ஒளியிலே நடக்கவில்லை.அவர்களுடைய கிரியைதேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாய் இருக்கவில்லை. *(வெளி.3:2)*.ஆகவே, இயேசு, நீ விழித்திருந்து, மீந்திருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து என்று எச்சரித்தார். *(3:2,3)* கர்த்தர், நீ கேட்டுப்பெற்றுக்கொண்ட வகையை

நினைவுகூர்ந்து,அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு என்று சொன்னார். ஒருவேளை, அவர்கள் ஆயத்தமாயிராவிட்டால் அவர்கள் அறியாத வேளையில், அவர்கள் மீது திருடனைப் போல் வருவேன் என்று இயேசு சொன்னார்.

சர்தை சபையில், பெரும்பாலானவர்கள், தவறில் இருந்த நிலையிலும், சிலபேர் பாவமற்றவர்களாக இருந்துள்ளனர்.(வெளி.3:4). தீயத்தீரா சபையிலும் இப்படிப்பட்ட நிலை இருந்தது.(வெளி.2:24-25). இப்படிப்பட்ட நிலைதான் இன்றைக்கும் உள்ளது. பெரும்பாலான கிறிஸ்துவின் சபைகள், விசுவாசத்தைவிட்டு விலகிப்போய், தவறைத் தழுவிக்கொள்வதால், இப்படிப்பட்ட நிலைமை சர்வசாதாரணமான ஒன்றாக மாறிவருகிறது. இந்நிலைமை,ஒரு முக்கியமான கேள்வியைக் கொண்டு வருகிறது. சிலபேர் மாத்திரமே நீதியுள்ளவர்களாக இருக்கக் கூடிய சபை ஓரிடத்தில் இருந்து மீதமுள்ளவர்கள் மனந்திரும்பாவிட்டால் அந்த நீதிமான்கள் என்ன செய்யவேண்டும்? மனந்திரும்புவதற்கான ஒரு கால அளவை, கர்த்தர் அங்கே கொடுக்கிறார். (வெளி.2:21)ஆனால், அது காலவரையற்றதாயிருந்து, ஆண்டுக்கணக்கில் நீடிக்கக்கூடியதல்ல. சர்தை சபையார், இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டபோது, மனந்திரும்பு வதற்கான அவகாச காலத்தில் இருந்தனர் என்பது வெளிப்படையானது. அச்சமயத்தில், நீதிமான்கள் சர்தை சபையிலேயே இருக்கமுடிந்தது. அந்த அவகாச காலம் முடிவுறும்போது நிலைமை என்ன? வேதவசனங்களின்படி, பெரும்பாலானவர்கள் தவறில் இருந்து, மனந்திரும்பமறுத்தால் நீதிமான்கள் வெளியேறவேண்டும் (1யோவா.1:7)கனியற்ற அந்தகாரக் கிரியைகளுடன் நாம் ஐக்கியம் கொள்ளக்கூடாது. (எபே.5:11) இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோக முடியாது.(ஆமோ.3:3)ஆமோஸ் தீர்க்கனுடைய இவ்வார்த்தைகள் உண்மையில் பின்மாற்றமாகிப் போன இஸ்ரவேலோடு தனக்கிருக்கும் உறவு பற்றி தேவன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார். விசுவாசமில்லாத தேவனுடைய பிள்ளைகள், தேவனுடனான தங்கள் ஐக்கியத்தை இழந்து போவார்கள். மனந்திரும்பாத பட்சத்தில் அப்படித்தான் நடக்குமென்று எபேசு சபையாரை இயேசு எச்சரித்தார்.(வெளி.2:5)

மனந்திரும்பாத, வழிவிலகிப் போன கிறிஸ்துவின் சபையானது, தன்னுடைய விளக்குத் தண்டை இழந்து போகும். அந்த நிலைமையில், எந்த ஒரு பிரிவினைச் சபைக்கும், பொய் மதத்திற்கும் இது வேறுப்பட்டதாக இருக்க முடியாது. விசுவாசமுள்ள எந்தவொரு கிறிஸ்தவனும், இயேசு மத்தியிலே உலாவிக்கொண்டிராத ஒரு மதக் கூட்டத்தில் அங்கமாக இருக்க முடியாது. (வெளி.1:13, 2:1) விசுவாசமற்ற ஒரு நிலையை ஒரு சபையானதுஅடையும்போது, விசுவாசமுள்ளவர்கள் வெளியேறவேண்டும். ஒருவேளை, பெரும்பாலானவர்கள் மனந்திரும்பினால், விசுவாசமுள்ள சிலபேர் தங்களைப் பிரித்துக் கொண்டுபோக வேண்டிய அவசியமில்லை.

பெர்கமு, தியத்தீரா, சர்தை சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள், நாம் இரட்சிக்கப்படுவதற்கு, கீழ்ப்படிதலுள்ள கிரியைகள் அவசியம் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள். கிருபையினாலே, உலகத்தின் பாவத்திற்கான ஒரு பலியாக, தேவன் தம்முடைய குமாரனைத் தந்தார்.(யோவான் 1:29,3:16, ரோமர் (3:24,5:1, 1யோவா.2:2). இவ்வகையில், இரட்சிப்பை அருளும் தேவனுடைய கிருபை எல்லா மனுஷருக்கும் பிரசன்னமாகியுள்ளது.(தீத்து.2:11). நாம் உண்மையாகவே தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம்.(அப்.15:11, எபே.2:5,8,2.தீமோ.1:9) ஆனால், பெரும்பாலான பிரிவினைச் சபைகள் போதிப்பது போல், கிருபையினால் மாத்திரம் இரட்சிப்பெனில்,கிருபையானது எல்லா மனுஷருக்கும் பிரசன்னமாயிருப்பதால் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும். ஆனால், இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தான் என்று வேதாகமம் கூறுகிறது. (மத்.7:13,14; லூக்.13:23,24)ஆகையால், இரட்சிப்பு கிருபையினால் உண்டாகிறது. ஆனால் கிருபையினால் மாத்திரம் அல்ல மாறாக கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாக, தேவனுடைய கிருபையைப் பெறும் சிலாக்கியத்தை அடைகிறோம். (ரோமர்.5:2). கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (எபே.2:8). கிட்டத்தட்ட எல்லா பிரிவினைச் சபைகளும் விசுவாசத்தினாலே மாத்திரம் ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் என்று போதிக்கிறது. ஆனால், எப்படி கிருபையினாலே மாத்திரம் இரட்சிப்பு என்பதற்கு எதிராக வேதம் போதிக்கிறதோ, அதுபோல், விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்பதற்கு எதிராகவும் வேதம் போதிக்கிறது. உண்மையில் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு கிடைக்குமானால் நம்முடைய இரட்சிப்பில் கிருபைக்கு எந்தப் பங்கும் இராது. நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம் என்று ஏற்கனவே பார்த்துள்ளோம். நாம் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதற்கான வாய்ப்பை தானாகவே எடுத்துப்போடுகிறது.


மேலுமாக, விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே செத்ததாயிருக்கும்.(யாக்.2:17) விசுவாசத்தினாலல்ல கிரியைகளினாலே தான் ஒருவன் நீதிமானக்கப்படுகிறான்.(யாக்.2:24) விசுவாசத்தினாலே மாத்திரம் என்ற பதம் ஒரே ஒரு தரம் வேதாகமத்தில் இடம் பெறுகிறது. அங்கும் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல என்றுதான் உள்ளது.

நம்மை இரட்சிப்பதற்கு விசுவாசமானது, கீழ்ப்படிதலுள்ள கிரியைகளோடு இணையவேண்டும். யாக்கோபு நிருபத்தில் 2:14-26வசனப்பகுதிகளில் நாம் இதைக் காணலாம். (கலா.5:6-யும் பார்க்கவும்), பிசாசுகளும் தேவனில் விசுவாசம் வைக்கிறது. ஆனால் அவைகள் கீழ்ப்படியாத படியினாலே நடுங்குகிறது. (யாக்.2:19)யூதரில், அதிகாரிகளாக இருந்த அநேகர் அவரிடம் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், அவர்கள் அவரை அறிக்கை பண்ணாதபடியால், அவர்கள் விசுவாசம் செத்தாயிருந்தது. (யோவா12:42,43).

தமஸ்கு செல்லும் வழியில் பவுல் இயேசுவில் விசுவாசம் வைத்தான். (அப்.9:1-6). ஆனால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்வரை அவன் பாவங்கள் கழுவப்படவில்லை.(அப்.22:16). அதைப் போலவே, பெர்கமு, தியத்தீரா சர்தையிலிருந்த சபைகள் இயேசுவில் விசுவாசம் வைத்தன. பெர்கமு சபை கிறிஸ்துவின் நாமத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்து விசுவாசத்தை மறுதலியாமலிருந்தது. (வெளி.2:13) இயேசு, தியத்தீராவில் உள்ள சிலருடைய விசுவாசத்தைத் தான் அறிந்திருப்பதாக சொன்னார்.(2:19)சர்தை இன்னும் அவருடைய பெயரைக் கொண்டிருந்தது. (வெளி.3:1)ஆனால், இந்த விசுவாசம் அவர்களை இரட்சிக்கப் போதுமானதாக இல்லை. இந்த மூன்று சபைகளுமே நீங்கள் மனந்திரும்பாவிட்டால், நித்திய தண்டனை உங்கள் மேல் வரும் என எச்சரிக்கப்பட்டது. பிரச்சினை என்னவென்றால், அவர்கள் விசுவாசம் முழுமையான கீழ்ப்படிதல் அற்றதாயிருந்தது. செத்த விசவாசம் ஒருவனையும் இரட்சிக்காது. நம்முடைய விசுவாசம் ஜீவனுள்ளதாயும், தேவனுடையஎல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படியும் கிரியையுள்ளதாயும், இன்னும் எல்லாவற்றையும் மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

சர்தைக்கு எழுதப்பட்ட நிருபம் இந்த மகத்தான வாக்குத்தத்தத்தோடு நிறைவுறுகிறது. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்தில் இருந்து அவருடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும், அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்(3:5)பரலோகத்தில் பிரவேசிப்பவர்களுக்கு வெள்ளையங்கி தரப்படும்.(வெளி.7:9-17). இந்த, சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வெண் வஸ்திரம் என்பது, பரிசுத்தவான்களின் நீதியாகும் (வெளி.19:8). இந்த வஸ்திரம் ஜெயங்கொள்கிறவர்களால் மாத்திரம் தரிப்பிக்கப்படும். பரலோகத்திலுள்ள ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில், சபையிலுள்ள எல்லோருடைய பெயரும் எழுதப்படும். (எபி.12:23) ஆனால், ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் விழுந்து மனந்திரும்பாவிட்டால், ஜீவ புத்தகத்திலிருந்து அவன் பெயர் கிறுக்கிப்போடப்படும்; எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து அவன் பெயர் கிறுக்கிப்போடுவேன். (யாத்.32:33).உங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட்டால், பிறகு நாம் அக்கினிக் கடலில் தள்ளப்படுவோம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.(21:27). ஒரு முறை இரட்சிக்கப்பட்டவன்,எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன் என்ற தவறான கொள்கைக்கு இவ்வசனம் மரண அடி கொடுக்கிறது. அக்கொள்கையானது, ஒருவன் கிறிஸ்தவனாகிவிட்டால், அவன் மீண்டும் ஒருபோதும் இழந்துபோவதில்லை என்று போதிக்கிறது. ஜெயங்கொள்ளுவதால் மாத்திரமே, நம்முடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலிருக்கும்படியாக பார்த்துக்கொள்ளவும் பரலோகத்திற்கான நுழைவைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.(வெளி.3:6)

Macon EZSR



# அது இலவசமானது

ஏசாயா - 55 : 1:2

ஒரு வியாபாரி ஒரு பொருளை மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்றே விளம்பரம் செய்து விற்பனை செய்தார். ஆனால் அந்த பொருள் சரியாக விற்பனையாகவில்லை. மீண்டும் அந்த வியாபாரி அதே பொருளை தரமான பொருள் குறிபிட்ட அளவுதான் விற்பனை உண்டு என்று விளம்பரம் செய்து அதிக விலை நிர்ணயம் செய்து அமோக விற்பனை செய்துவிட்டார். ஆனால் நம் தேவன் இப்படி செய்யவில்லை என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் இதற்கு எதிர்மறையாக செய்கிறார். அதிகவிலை மதிப்பான ஒன்றை அவர் இலவசமாக கொடுக்கிறார் (ஏசாயா.55:1:2) வசனங்களில் அவர் கடைத்தெருவில் பொருட்களை விற்கும் ஒருவராக சித்தரிக்கப்பட்டு இருக்கிறார். வருவோர் போவோரிடம் இவ்வாறு கூறுகிறார்.

ஓ..... தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். பணமில்லாதவர்களே நீங்கள் வந்து வாங்கி சாப்பிடுங்கள். நீங்கள் வந்து பணமுமின்றி, விலையுமின்றி திராட்சரசமும், பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமில்லாததற்காக பணத்தையும் திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?

நமது ஆண்டவர் அந்த தண்ணீரை இலவசமாய் கொடுப்பேன் என்கிறார். (வெளி.21:6) அன்றியும், அவர் என்னை நோக்கி ஆயிற்று, நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய் கொடுப்பேன். இந்த இலவசமான தண்ணீரைப்பற்றி கூறுகிறார்(யோ.4:14) நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும். *ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக;தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்* (வெளி.22:17) *பண்டிகையின் கடைசிநாளாகிய பிராதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு; ஒருவன் தாக்மாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.*(யோ.7:37) நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுக் கொள்வீர்கள்.இந்த பூமியிலே நமது ஆண்டவர் இலவசமான அந்த இரட்சிப்பை குறித்து வீதியிலே சத்தமிட்டு அழைக்கிறதை நாம் பார்க்கிறோம். இன்றைய நாட்களிலே அந்த இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிற நாம் எத்தனைப்

பேர் நமது ஆண்டவரைப்போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.விரல் விட்டு எண்ணிவிடலாம். இதைக் குறித்து நான் வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன். அநேக பிராந்திய சபைகளிலே கர்த்தரைப்பற்றி வாய்திறந்து பேசுவதற்கு வெட்கப்படுகிறார்கள். இது வெட்கப்படவேண்டிய காரியம். ஆனால் பேசக்கூடாத காரியங்களை வாய்திறந்து சத்தமிட்டு வெட்கப்படாமல் பேசி கர்த்தருடைய நாமத்தை தூஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இனியும் அவ்விதமாய் இராமல் சமயம் கிடைக்கும்போதெல்லாம் இலவசமான இரட்சிப்பைக் குறித்து பிரசங்கித்து மக்களை அழைக்க வேண்டிய ஒவ்வொருடைய தலையின்மேலும் விழுந்த கடமை என்று வேதம் சொல்லுகிறது.

## எரேமியா சொல்வதைக்கேளுங்கள் (எரே.2:13)

என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள். ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். எரேமியா சொல்வதைப் போல இங்கு அநேக மக்கள் இரட்சிப்பு என்றால் என்னவென்று தெரியாமல் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாத தண்ணீர்க்காக வெடிப்புள்ள தொட்டிகளை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மக்களுக்கு எரேமிய ா சொல்லுகிறார். (எரே.2:18) இப்போதும் சீகோரின் தண்ணீரைக் குடிப்பதற்கு எகிப்து போகிறதினால் உனக்குப் பிரயோஜனம் என்ன? ஐப்பிராத்து நதியின் தண்ணீரைக் குடிப்பதற்கு அசிரியாவுக்குப் போகிறதினால் உனக்கு பிரயோஜனம் என்ன? என்று கேள்விகேட்டு விட்டு அதற்கு பதிலையும் சொல்லுவதைக் கேளுங்கள் (சகரியா.13:1) அந்நாளில் பாவத்தையும், அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கு எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும் (எரே.14:8) அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு பாதி கிழக்கு சமுத்திரத்திற்கும், பாதி மேற்கு சமுத்திரத்திற்கும், மாரி காலத்திற்கும், கோடைக்காலத்திற்கும் இருக்கும் என்கிறார்.

ஆகவே, இப்பேர்ப்பட்ட இலவசமான ஜீவத்தண்ணீராகிய இரட்சிப்பைக் குறித்து உதாசினம் செய்துவிட்டு சில கூட்டத்தினர் கடந்து செல்கின்றனர். அவர்கள், கடைகளைச் சுற்றி நின்று திருப்திக்காக பொருட்களை வாங்குகிறார்கள். தங்களுக்கு ஊட்டச்சத்து அளிக்க முடியாத உணவுக்காக அவர்கள் பணத்தை செலவழிக்கிறார்கள். தங்கள் தாகத்தை திருப்திபடுத்தாத பானத்துக்காக வீணாக செலவழிக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு தேவையானதை ப்ணத்தினால் வாங்க முடியாது என்பதை புரிந்துக் கொள்ள மனதில்லை. இதைக் குறித்து நமது ஆண்டவர் கூறுகிறார்.

ஜீவ அப்பம் நானே, உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியமாலிருக்கும்படி வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான், நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்(யோ.6:48- 51).

இலவசமான அந்த போஷாக்கைக் குறித்து பேதுரு சொல்வதைக் கேளுங்கள் ***நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்.*** (1பேதுரு-2:3).தேவன் மெய்யான போஷாக்கையும் நித்திய சந்தோஷத்தையும், பாவத்திலிருந்து மன்னிப்பையும் அருளுகிறார். இவை அனைத்தும் இலவசமானவை, பொருளை வழங்குபவர்கள். அவரை அசட்டை செய்தாலும், அவர் தன் விற்பனை முறையை மாற்றிக்கொள்ளவில்லை. இதை வாசித்து சிந்தித்துக் கொண்டிருக்கிற நண்பர்களே, தாய்மார்களே, இந்த இலவசமான இரட்சிப்பை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

விலையேறப் பெற்ற தம் ஜீவனை அந்த கோர சிலுவையிலே ஒப்புக்கொடுத்து, அந்த இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாத உங்களையும் இப்பொழுதே பெற்றுக்கொள்ளும்படியாய் இரட்சகரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து அழைக்கிறார். ஆகவே நீங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை குறித்து கேள்விப்பட்டு, விசுவாசித்து, பாவத்தை விட்டு மனந்திரும்பி, அந்த இயேசுகிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினாலே அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று, இயேசுகிறிஸ்துவின் அதிகாரமுள்ள நாமத்தினாலே ஞானஸ்நானம் (தண்ணீரில் முழ்கி) பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்(அப்.2:38, அப்.8:37,38 )அந்த இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நானும் இந்த செய்தியின் மூலம் உங்களை அழைக்கிறேன்.

இரட்சிப்பு நித்தியத்திற்குமான விலைமதிப்புள்ளது. ஆனால் முழுமையாக இலவசமானது.

யோசுவா செல்வம்

அரக்கோணம்

# ஆவியில் எளிமையுள்ளவர்கள்...

***இயேசு மத்தேயு 5:3ல்" ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்..." என்று பேசும்போது யாரைக் குறித்துப் பேசுகிறார்? இப்படிப்பட்ட நபருடைய குணாதிசயமென்ன?***

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை எளிமை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இவ்வார்த்தை முழுமையான மற்றும் பூரணமான வறுமையைத் குறித்து ஆடம்பரத்தேவைகளில்லாத மனிதனைக் குறித்து இங்கு இது பேசாமல் ஒன்றுமற்ற நிலைமையில் இருக்கும் ஒருவனைக் குறித்து பேசுகிறார். இயேசு இப்படிச் சொல்லுகிறார்.**முற்றிலும் வறுமையிலிருப்பவன் எவனோ அவன் பாக்கியவான்.** நமதாண்டவர் இங்கு கிரேக்க மொழியில் பேசாமல் அராமிக் மொழியில் பேசுகிறார். நாமிங்கு எளிமை என்று வாசிக்கும் இவ்வார்த்தை யூதர்களுக்கு இப்பூமியில் தனக்கென்று ஒன்றுமில்லாதவனும் மற்றும் அதினால் முழுமையாய் தேவன் மேல் நம்பிக்கை வைத்தவனுமாயிருந்த ஒருவன் என்ற அர்த்தத்தைத் தரும்.

இயேசு இங்கு மாம்சரீதியான பொருளோடு பேசாமல் ஆவிக்குரிய ரீதியில் பேசுகிறார் என்பது எல்லோருக்கும் புரியுமென நம்புகிறேன். நாம் அராமிக் மற்றும் கிரேக்க பின்னணியை மனதில் கொள்ளுவோமானால் தன்னால் ஒன்றும் முடியாது என்று உணர்ந்து மற்றும் தேவன் தான் தன்னை ஒரு அர்த்தமுள்ள நபராக மாற்ற முடியுமென்று அவரையே முழுவதும் நம்புகிற மனிதனை குறித்து இயேசு பேசுகிறார் என்பது விளங்கும்.

இயேசுவால் பேசப்பட்ட பாக்கிய வசனங்களில் இது தற்செயலாக முதலிடத்தை பிடித்ததாக எனக்குத் தெரியவில்லை.ஆவியில் எளிமை என்பதின் உட்பொருளே தாழ்மைதான். தேவனை பிரியப்படுத்தவும், கனப்படுத்தவும் முயற்சி செய்யும் ஒருவனுடைய வாழ்க்கையில் தேவையான மற்ற காரியங்களை வளர்த்துக்கொள்ளும் முன் நாம் தாழ்மை உடையவர்களாகவும் மற்றும் அதை வெளிப்படுத்துகிறவர்களாகவும், இருப்பது அவசியம்.

கிறிஸ்தவத்தோட்டத்தில் தாழ்மை என்பது மிக அழகான மலர் என்று சொல்லுவதற்கு ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்கிறது. நாம் பிறரின் வாழ்வில் தாழ்மையைக் கண்டு மெச்சுகிறோம். ஆனால் நம் வாழ்வில் அதை பிரதிபளிக்கிறோமா-இல்லையா என்பது வேறுவிஷயம். தாழ்மை ஓரிடத்தில் இருக்கவேண்டுமென்றால் அங்கு நான் என்ற எண்ணம் சாம்பலாக வேண்டும். இது நம்மில் அநேகருக்கு முடியாத காரியமாயிருக்கிறது.

மத்தேயு 23:12 வசனத்தில் இயேசு சொன்ன வார்த்தையின் அர்த்தத்தை நாம் எளிதாய் புரிந்து கொள்ள முடியும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் அவரின் தாழ்மை மூலமாய் ஒரு தெய்வீக உதாரணத்தை நமக்கு ஏற்படுத்தினார் என்பது எப்பொழுதும் உண்மை என்றாலும் அப்படி அவர் செய்ததின் மூலமாய் தாழ்மை உயர்த்தும் என்ற அத்தாட்சியையும் நமக்கு விட்டுச் சென்றார்.

பிலி:2:5-11 முதல் உள்ள அதிசயமான வார்த்தைகளை வாசிக்கும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைதாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிக்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

இவ்வார்த்தைகள் உண்மை என்றால் அவைகள் உண்மைதான். ஆகவே நாம் இதை ஏற்றுக்கொண்டு நம்மை தாழ்த்தி வெறுமையாக்கி அவருடைய அடிச்சுவடை பின்பற்ற வேண்டும் அப்படிச் செய்வதின் மூலமாய் நாம் முடிவில் உயர்த்தப்படுவோம்.


தேவன்தாமே ஆவியில் எளிமையாய் இருக்கத் தேவையான இந்த ஆவிக்குரிய தாழ்மையையும், நன்மையையும் உங்களுக்கு கட்டளையிடுவாராக. ஆமென்.

**Byran Nicholas**

### உங்கள் கவனத்திற்கு

வாசகர்கள் விலாசம் மாறிச் செல்லும்போது, உங்கள் பழைய, புதிய விலாசங்களோடு பதிவு எண்ணையும் சிரமம் பாராமல் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி எங்களுக்கு தெரிவியுங்கள். கர்த்தருடைய பணத்தை வீணாய் செலவிடுவதை தவிர்த்துக்கொள்வதற்கு எங்களுக்கு உதவுங்கள். இதழ் திரும்பி வந்தால் மேற்படி விலாசதாரருக்கு இதழ் அனுப்பவது உடனடியாக நிறுத்தப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்



# கதவு

"ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன் ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது ".(1கொரி.16:8,9)இயேசு சொன்னார் "நானே வாசல் (or) கதவு "(யோவான்10:1,2,7,9) பவுல் சொல்லுகிறார். மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கும்படி துரோவா பட்டணத்தில் வந்தபோது கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில் (2கொரி.2:12). பரிசுத்த வேதாகமம் வித்தியாசப்பட்ட கதவுகளைப் பற்றி பேசுகிறது இந்த கதவு என்ற வார்த்தை ஒப்புமையாக பேசப்படுகிறது.

பரிசுத்த வேதாகமம் வித்தியாசப்பட்ட கதவுகளைப்பற்றி பேசுகிறது. இந்த கதவு என்ற வார்த்தை ஒப்புமையாக பேசப்படுகிறது. வேதாகமத்தில் "கதவு" என்றால் வாய்ப்பு என்று அர்த்தமாகும். நாம் எளிதாக புரிந்துகொள்ள (கொலோ.4:4 )திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் என்று பவுல் எழுதுகிறார். புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தை பிரசங்கித்து திரும்பின பவுலும் பர்னபாவும்...... சபையை கூடிவரச்செய்து தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து....(அப்.14:27). துரோவாவில் கதவுதிறந்திருந்தது(2கொரி.2:12) என்பதில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட வாய்ப்பு இருந்தது என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது.இதைப்போலவே இன்றைக்கும் அநேக கதவுகள் நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது.

## 1.ஆலோசனையின் கதவு உனக்காக திறக்கப்பட்டிருக்கிறது

தேவனுடைய திட்டம் - ஆரம்பகால முதலே உண்டு மனிதனைக் குறித்த அந்த திட்டத்தில், அவன் ஆலோசனையின் கதவு வழியாக தம்மண்டை வரவேண்டும் என்பதே. இயேசுவின் அழைப்பு- என்னிடத்தில் வாருங்கள் என்பதாயிருக்கிறது (மத்11:28,29).என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்.... பிதாவினிடத்தில் கேட்டுக்கற்று கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்(யோவான்.6:44,45) தேவனுடைய இந்த ஆலோசனை திட்டமானது உலகமெங்கும் எடுத்து சொல்லப்பட்டது(மத்.28:19 மாற்கு16:16) ஒருவராகிலும் இத்திட்டத்திற்கு விதிவிலக்கல்ல இந்த மகத்தான கதவு நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது. நாம் அதை பயன்படுத்துவோமா?

## 2.இரட்சிப்பின் கதவு உனக்காக திறந்திருக்கிறது

தேவனுடைய குமாரன் இந்த பூமிக்கு வந்ததின் அதிமுக்கியமான நோக்கம் (1.தீமோ.1:15). குமாரன் - இதை செவ்வையாக செய்து முடித்தார் இழந்துபோனதை இரட்சிக்கவும் காணாமல் போனதை கண்டு பிடிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்.(லூக்கா19:10). அவருடைய ஊழியம், அவருடைய அற்புதங்கள், அவருடைய உபதேசங்கள், அவருடைய முன்மாதிரியான ஜீவியம், அவருடைய அர்ப்பணிப்பான மரணம்இவையெல்லாவற்றிற்கும் ஒரே ஒரு நோக்கம்தான் உண்டு - பாவியை மீட்க அவராலேயன்றி ஒருவருக்கும் இரட்சிப்பு கிடையாது(அப்.4:12). ஒருவன் கிறிஸ்துவில் இரட்சிப்பை பெறவில்லையெனில்,

அவன் ஒருக்காலும் இரட்சிப்பை பெறவே முடியாது. அவன் இரட்சிப்பை பெற வேறு வழி நிச்சயமாய் கிடையாது-(யோவான்14:6) பாவி என்ன செய்யவேண்டும்? புத்திமதியை கேட்டு இரட்சிப்பின் கதவின் வழியாய் உட்பிரவேசிக்கவேண்டும். எத்தியோப்பிய மந்திரிக்கு அந்த கதவு திறக்கப்பட்டிருந்தது(அப்.8:12, 8:35-38). நீ அதிக காலம் பாவத்திற்கு அடிமையாக இருக்க தேவனுக்கு விருப்பமில்லை உன்னை அடிமைதனத்திலிருந்து மீட்கவே இரட்சிப்பின் கதவு சிலுவையின் மூலம் திறக்கப்பட்டது.

## 3. சேவையின் கதவு உனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது

அப்.2:47 இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துவந்தார். பிலிப்பிய சபைக்கு பவுல் எழுதுவதாவது, தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.(பிலி.2:13)உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் (ரோமர்.12:1).நம்மை சேவை செய்யவே தேவன் தெரிந்து கொண்டார், மனுஷகுமாரனும் ஊழியம் செய்யவே வந்தார் (மத்20:28) நாமும் ஊழியம்(சேவை) செய்ய வேண்டும், மனத்தாழ்மையை அணிந்து கீழ்ப்படிய வேண்டும் (1பேதுரு 5:5). ஆரம்ப கால சபை சேவை மனப்பான்மை நிறைந்திருந்தது (அப்.4:32-37) மாம்ச தேவைகளுக்காக சேவை செய்தனர். ஆவிக்குரிய தேவைகளுக்காக சேவை செய்தனர் (கலா.6:1-2) காணாமல் போனதை தேட தீவிரமாக இருந்தார்கள். ஆகவே சிலுவையைப்பற்றி பிரசங்கிப்பதில் தினந்தோறும் அக்கறையுள்ள வர்களாயிருந்தார்கள்.(அப்.5:42: 8:4)எபேசுவில் பவுலுக்கு ஒரு மாபெரும் கதவு திறக்கப்பட்டிருந்தது. நமக்கும் ஒரு சேவையின் கதவு திறக்கப்பட்டிருக்கிறது. நாம் நல்ல உக்கிராணக்காரனாக இருந்து அந்த வாய்ப்பை பயன்படுத்துகிறோம்.

பிலடெல்பியா சபைக்கு இயேசு சொல்லுகிறார் இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி.3:8) சேவையின் கதவு உனக்காக திறக்கப்பட்டிருக்கிறது. இன்றே சேவை செய்ய புறப்படுவீர் (மத்.21:28,29,30,31).

## 4. பரலோகத்தின் கதவு உனக்காகத் திறக்கப்பட்டிருக்கிறது

இயேசு சொன்னார் ***நானே ஆடுகளுக்கு வாசல்..... என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்*** (யோவான்10:7,9) சீஷர்களை விட்டு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன், ***என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்*** (யோவான்.14:2,3) வாசியுங்கள். இயேசு நமக்காக ஆயத்தம்பண்ணின கதவுகள் வழியாய் பிரவேசிக்க முடிவு செய்தவர்களுக்கு பரலோகத்தின் கதவை திறந்திருக்கிறார். பரலோகம் என்பது தேவன் தமது கைகளினால் (2.கொரி.5:1) கட்டப்பட்ட ஒரு வீடு. அதுஅழியாததும், நிலை நிற்கிறதுமான மகிமையும் உடையது. (1பேதுரு1:3,4,5) அங்கு மரணமில்லை, கண்ணீரில்லை, துக்கமில்லை (வெளி 21:4)வாசியுங்கள் - (வெளி.22 : 1-5)மேற்கண்ட ஆலோசனையின் கதவு,இரட்சிபின் கதவு, சேவையின் கதவு, பரலோகத்தின் கதவு,ஆகிய கதவுகளை தேவன் திறந்துவைத்திருக்கிறார்.

முடிவாக : வெளி 3:20 (For a great and effective door has opened to me) உன்னுடைய வாழ்க்கையில் இயேசு பலவந்தமாக நுழைய விரும்ப மாட்டார். நீ தான் அவரை அன்போடு அழைக்க வேண்டும். நீ அனுமதிக்க வேண்டும். அப்பொழுது ஒரு மகத்தான கதவு உனக்காக திறக்கப்பட்டிருக்கிறது.

வே.தானியேல் துரைராசன்

# விசுவாசத்தின் அடிப்படைகள்

## பாடம் - 4

1. *மனிதனுடைய பொதுவான அறிவு அல்லது காரண காரியங்களை கேட்டறியும் சக்தி.*
   1. ஏரேமியா : 10:23
   2. நீதிமொழிகள் : 3:5,6
   3. ஏசாயா : 55:8,9
   4. முடிவு:மனிதன் முற்றிலுமாக தன்னுடைய பொது அறிவையோ, காரணகாரியத்தை கேட்டறியும் சக்தியையோ மட்டும் சார்ந்திருக்க முடியாது.

2. 1.மனித உணர்வுகள்:
   2. நீதிமொழிகள் 14:12
   3. மத்தேயு 7:21
   4. **முடிவு: மனித உணர்வுகளும் உணர்ச்சி வசப்படுதலும் தேவன் மார்க்கத்தில் நம்பத்தகுந்த வழிகாட்டியல்ல.**

3. முடிவு : பிரசங்கி 12:13
   ஆவிக்குரிய விஷயங்களில் தேவனால் ஏவப்பட்ட வார்த்தையாகிய வேதாகமமே ஒரே நிலையாகும்.

4. வேதாகமத்தின் அமைப்பு:
   66 புத்தகங்கள்
   1. பழைய ஏற்பாடு (39 புத்தகங்கள்)
   2.புதிய ஏற்பாடு (27புத்தகங்கள்)

5. பழைய ஏற்பாட்டில் உள்ள பிரிவுகள்:
   1. 5 சட்டப்புத்தகங்கள் (ஆதியாகமம் - உபாகமம்)
   2. 12 சரித்திர புத்தகங்கள் (யோசுவா - எஸ்தர்)
   3. 5 கவிதைப் புத்தகங்கள் (யோபு - உன்னதப்பாட்டு)
   4. 17 தீர்க்கதரிசன புத்தகங்கள் - (ஏசாயா - தானியேல்)
      12 சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (ஓசியா - மல்கியா)

6. புதிய ஏற்பாட்டிலுள்ள பிரிவுகள்:
   1. 4 சுவிசேஷங்கள் (மத்தேயு - யோவான்)
      கிறிஸ்துவின் வாழ்க்கை
   2. 1 சரித்திர புத்தகம் (அப்போஸ்தலருடைய நடப்புகள்)
      எப்படி கிறிஸ்தவனாவது.
   3. 21 நிருபங்கள் (ரோமர் - யூதா)
      எப்படி கிறிஸ்த்வனாக வாழ்வது
   4. 1 தீர்க்கதரிசன புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்)

7. நாம் இப்பொழுது எந்த ஏற்பாட்டில் கீழ் வாழ்கிறோம்? நாம் எதற்கு கீழ்ப்படிய கடமைப்பட்டுள்ளோம்?

1. இன்று நாமகரன உலகில் சிலர் ஓய்வு நாளையும் பத்து கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டுமென போதிக்கிறார்கள்.

2. முதலாவது பழைய ஏற்பாட்டைக் குறித்த சில முக்கியமான குறிப்புகளைப் பார்ப்போம்.

அ) இது பிரமாணம் என்றும் (யோவான் 1:17 உபாகமம் 4:44) ஏற்பாடு (யாத்திராகமம் 34:27) என்றும்கூட அழைக்கப்பட்டுள்ளது.

ஆ) இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு கொண்டு வரப்பட்ட போது இது தேவனுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது (யாத்.19:1-5)

இ) இஸ்ரவேல் மக்களுக்காகவே கொடுக்கப்பட்ட ஒரு தேசிய சட்டம் இது வேறு யாருக்கும் அல்ல.

1. யாத்திராகமம் 19:3,6
2. யாத்திராகமம் 34:27
3. உபாகமம் 5:1

ஈ) இதில் 10 கட்டளைகளும் அடங்கும் (யாத்திராகமம் 20:3-17;34:28)

உ) இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே..... அந்த சந்ததி வருமளவும் கலாத்தியர் 3:19. அந்த சந்ததி கிறிஸ்து கலாத்தியர் 3:16

ஊ) புதிய பிரமாணத்தினால் மாற்றப்படும்படிக்கு நீண்ட காலத்திக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது. எரேமியா 31:31

எ) இயேசு அதை நிறைவேற்றும்படி வந்தார்.

1. மத்தேயு 5:17
2. லூக்கா 24:25-17;44-48

ஏ) இயேசு அதை எடுத்து அவருடைய சிலுவையின்மேல் ஆணியடித்தார்.(கொலோசேயர் 2:14-16)

ஐ) இயேசு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாடு அவருடைய மரணத்திற்குப்பின் அமலுக்கு வந்தது என்று உண்மையோடு இது ஒத்திருக்கிறது. அந்தப்படி பழையதை மாற்றிற்று (எபிரேயர்.6:15-17)

ஒ) அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:15-ல் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் கீழ் இல்லை. கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்துக்கு மரித்திருக்கிறார்கள். பழைய சட்டத்தினின்று கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Charles Di palma G.Daniyal



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

---

**Designed by.**

**Aarthi Computers.** 811, C.P.Complex, Brough Road, Erode-1 ✆ : 260971

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**